செ.வெ.எண்.80 நாள்.26.10.2017.

திருநெல்வேலி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், வரகனூர் ஊராட்சிப் பகுதியில் வரகனூர் முதல் செவல்பட்டி வரை ரூ.66.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தார்ச் சாலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

--------

திருநெல்வேலி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், வரகனூர் ஊராட்சிப் பகுதியில் தமிழ்நாடு கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வரகனூர் முதல் செவல்பட்டி வரை ரூ.66.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.10.2017) நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், தார்ச்சாலை, தார்ச்சாலைக்கு கீழ் கப்பி சாலை சரியான அளவில் தரமாக போடப்பட்டுள்ளதாக என்பதை மாதிரி வெட்டி எடுக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, இச்சாலையில் தரைப்பாலம் அமைக்கப்பட்டுள்ளதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.சக்திமுருகன், திருவேங்கட வட்டாட்சியர் திரு.ராஜு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பார்த்தசாரதி, திரு.பழனிவேல் ஊரக வளர்ச்சி முகமை உதவி பொறியாளர் திரு.ரமேஷ், குருவிகுளம் ஊராட்சி ஒன்றிய ஒவர்சியர்கள் திரு.கணேசன், திரு.தமிழரசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.